# ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப் பொருள்

## 25 .01 .2022-ம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.

**பொருள் எண்.01)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர்– 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.:– 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மான எண்.5, பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண்.02)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர்– 2021 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

**தீர்மான எண்.6, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.03)** இந்நகராட்சி எல்லைக்குள் வரி மற்றும் வரியில்லா இனங்களை வசூல் செய்ய பொதுமக்கள் அறியும் வகையில் ஆட்டோவில் ஒலி பெருக்கி அமைத்து நகரம் முழுவதும் விளம்பரம் செய்ய 23.11.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.அரசு,<br>2/78, குட்டகரை தெரு, ஆற்காடு | ரூ.1750/– நாள் ஒன்றுக்கு |
| 2 | திரு.பி.மணி,<br>7, தந்தைபெரியார் தெரு, ஆற்காடு | ரூ.1950/– நாள் ஒன்றுக்கு |
| 3 | திரு.கே.வேலு,<br>13, ராதாகிருஷ்ணன் தெரு, ஆற்காடு | ரூ.1850/– நாள் ஒன்றுக்கு |

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற முன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.01.ல் உள்ள திரு.ஆர்.அரசு, 2/78, குட்டகரை தெரு, ஆற்காடு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

3) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

4) 2021–2022ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து தோராயத் தொகை ரூ.1.00 இலட்சம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.7, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.04)** இந்நகராட்சியில் 2021–2022ம் ஆண்டு 15$^{th}$ CFC – Tied Grant திட்டத்தின் கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கான 1 HP மோட்டார் Single Phase Submersible Pumpset–15 எண்ணங்கள் சப்ளைசெய்தல், 5HP 2 Nos. சப்ளை செய்தல் பணிக்கு 30.12.2021ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | என்.எழிலன் | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | பி. ஹயாதிபீ | 0.27 % மதிப்பீட்டினை விட அதிகம் |

அ.கு:- மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. என்.எழிலன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விகிதத்தில் உள்ளதை ஏற்று அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.8, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.05)** இந்நகராட்சியில் 2021-2022ம் ஆண்டு 15th CFC - Tied Grant திட்டத்தின் கீழ் ரூ.90,000 ஆயிரம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட ஜெயம் நகர், அசோக்நகர், பையோகேஸ் பிளான்ட் வளாகத்தில் உள்ள MCC மையங்களுக்கு தேவையான 3 எண்ணங்கள் Napkin Incinerator Machine சப்ளை செய்தல் பணிக்கு 30.12.2021ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | என்.எழிலன் | 0.14 % மதிப்பீட்டினை விட அதிகம் |
| 2 | பி. ஹயாதிபீ | 0.21 % மதிப்பீட்டினை விட அதிகம் |

அ.கு:- மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் பி. ஹயாதிபீ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.21% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.9, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.06)** இந்நகராட்சியில் 2021-2022ம் ஆண்டு கல்வி திட்டத்தின் கீழ் ரூ.9.40 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.19ல் அண்ணாநகர் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள 5 கட்டிடங்களில் உள்ள மேற்கூரை பழுதடைந்துள்ளதால் Weathering course concrete water proof tiles பழுதுபராமரிப்பு பணிக்கு 21.01.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | PRKAY Construction Pvt Ltd, | 0.004 % மதிப்பீட்டினை |

| | | |
|---|---|---|
| | | விட குறைவு |
| 2 | R. ராஜா | 0.24 % மதிப்பீட்டினை விட அதிகம் |

அ.கு:– மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் PRKAY Construction Pvt Ltd, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.004% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.10, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.07)** இந்நகராட்சியில் அலுவலக கட்டிடத்தில் செயல்பட்டு வரும் UPS Generator தற்போது பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட UPS –னை பழுதினை சரிசெய்திடவும் மேற்கண்ட பணி மேற்கொண்டதற்கான தோராய செலவினத் தொகை ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியில் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.11, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.08)** இந்நகராட்சியில் அலுவலக கட்டிடத்தில் செயல்பட்டுவரும் UPS பழுதினை சரிசெய்திட தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | பி. ஹயாதிபீ | ரூ.29300/– |
| 2 | M/s. K.ராஜாராம் & கோ | ரூ.29400/– |
| 3 | என்.எழிலன் | ரூ.29500/– |

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்து பி. ஹயாதிபீ ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.12, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.09)** இந்நகராட்சிக்குட்பட்ட பெருமாள் கோயில் பம்ப்வுசுக்கு செல்லும் பைப்லைன் கேபிள்கள் பாலாற்றில் ஏற்பட்ட வெள்ளபெருக்கில் அடித்து செல்லப்பட்டதால் மின்மயானத்திற்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து புதிதாக பைப்லைன் பதித்து கேபிள்கள் இணைப்பு ஏற்படுத்துதல் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரர் மூலம் ரூ.1,88,785/– செலவினத்தில் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப் பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.13, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.10)** இந்நகராட்சிக்குட்பட்ட வேலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 75HP மோட்டாரில் ஏற்பட்டுள்ள SS Shaft மற்றும் இம்பெல்லர் பழுதினை சரிசெய்து மோட்டார் உதிரி பாகங்கள் பொருத்துதல் பணியை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரர் மூலம் ரூ.48,680/- செலவினத்தில் குடிநீர் நிதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.14, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.11)** இந்நகராட்சிக்குட்பட்ட வேலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் வடகிழக்கு பருவமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளபெருக்கினால் 75HP மோட்டாரில் பழுதடைந்துள்ளதை சரிசெய்தல் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் திட்டத்தில் திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரர் மூலம் ரூ.48,680/- செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.15, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.12)** இந்நகரில் வடகிழக்கு பருவமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பெருக்கினால் காசி விஸ்வநாதர் கோயில் பம்ப் ஹசில் உள்ள பைப்லைன் மற்றும் கேபிள்கள், மின்மோட்டார் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதினைசரிசெய்து உதிரி பாகங்கள் பொருத்துதல் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் குடிநீர் திட்டத்தில் திரு.எ திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரர் மூலம் ரூ.82,913/- செலவினத்தில் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப் பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.16, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.13)** இந்நகரில் வடமேற்கு பருவமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பெருக்கினால் தலைமை நீரேற்று நிலையத்தில் கேபிள்கள்ள மற்றும் பைப்லைன்கள் அடித்து செல்லப்பட்டதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வார்டு 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு வாடகை லாரி மூலம் குடிநீர் சப்ளை செய்தல் பணியினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் குடிநீர் திட்டத்தில் M/s K. ராஜாராம் & Co. ஒப்பந்ததாரர் மூலம் ரூ.4.00,000/- செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:-** 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.17, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.14)** இந்நகராட்சிக்குட்பட்ட வேலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 75 எச்.பி 5, மின்மோட்டார் மற்றும் பம்ப் பழுதுபார்த்தல் பணியினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் குடிநீர் திட்டத்தில் T. கணேஷ் என்ஜினியரிங் மற்றும் எலக்ட்கல்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தில் மூலம் ரூ.2.06,837/– செலவினத்தில் குடிநீர் நிதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.18, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.15)** இந்நகராட்சிக்குட்பட்ட வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழைய நீர் உறிஞ்சு கிணறு வேப்பேரியில் இருந்து நீர் சேகப்பு கிணறுகளுக்கு இடையே பைப்லைன் இணைத்திட புதிதாக 160mm Pvc பைப்லைன் கேபிள்கள் மற்றும் இதர உதிரி பாகங்கள் பொருத்துதல் பணியை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர்திட்டத்தில் திரு.எழிலன், ஒப்பந்ததாரர் மூலம் ரூ.9,42,019/– செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.19, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.16)** இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி திட்ட கணினி அமைப்பாளர் அறைகளுக்கு 3 எண்ணிக்கைகள் AIO Intel Core i3 A–11 in one Desktop Computer கொள்முதல் செய்தல் பணியை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் M/s. Gets Computer Accessories நிறுவனத்தின் மூலம் ரூ.2.08,860/– செலவினத்தில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.20, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.17)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, அபாய் தெருவில் சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் புதிதாக சிறுபாலம் அமைத்தல் பணியை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிவு 15ன் கீழ் பொதுநிதியில் திரு.எ.எம்.அரி ஒப்பந்ததாரர் மூலம் ரூ.1,24,215/– செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.21, பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண்.18)** இந்நகராட்சியின் எல்லைக்குபட்ட பகுதியில் பொது மக்களுக்கு இடையூராக கேட்பார் அற்று சுற்றி திரியும் பன்றிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ள தோராயச் செலவினத் தொகை ரூ. 1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூராக சுற்றித் திரியும் பன்றிகளை பிடித்து இந்நகருக்கு வெளியே காடுப்பகுதியில் கொண்டு சென்று விட இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) இச்செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 695/2020/எச்1

**தீர்மான எண்.22, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.19)** இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளின் கீழ் பணிபுரியும் கடைநிலை ஊழியர்களான தூய்மைப் பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள், இரவு கவலர்கள், ஜெயின்மேன், மின் கம்பியாளர்கள், மின் கம்பி உதவியாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு 2022 ஆண்டிற்கான சீருடைகளை வாங்க மன்றப்பொருளில் 10.11.2021 ஆம் நாளில் தோராயச் செலவினத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு மறுவிலைப்புள்ளி அறிவிப்பு 15.12.2021ஆம் நாளில் செய்யப்பட்டதில் 04.01.2022ஆம் நாளில் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதில் கீழ் காணும் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கபடுகிறது.

| வ. எண் | துணிகளின் விவரம் | Tamilnadu Small industries development Corporation Ltd, Thirumazhisai | Lalitha Agencies, Ambattur | Sri Sai Kiran Traders, Anverthikanpet Rate offered is Exclusive of GST |
|---|---|---|---|---|
| 01. | காக்கி சட்டை (ம) பேண்ட் | 165/- (5% GST) (Per mtr) | 172/-(5%GST) (Per mtr) | 168/- (Per mtr) |
| 02. | வெள்ளை பேண்ட் | 165/- (5% GST) (Per mtr) | 172/- (5% GST) (Per mtr) | 168/- (Per mtr) |
| 03. | வெள்ளை சட்டை | 94/- (5% GST) (Per mtr) | 102/- (5% GST) (Per mtr) | 96/- (Per mtr) |
| 04. | புடவை (வெள்ளை, பச்சை, புளூ, காக்கி ) | 485/- (5% GST) (Per mtr) | 478/- (5% GST) (Per mtr) | 465/- (Per mtr) |
| 05. | அச்சடிக்கப்பட்ட புடவை | 510/- (5% GST) (1 No) | - | - |
| 06. | ஜாக்கெட் (வெள்ளை, பச்சை, | 94/- (5% GST) (Per mtr) | 125/- (5% GST) (Per mtr) | 115/- (Per mtr) |

| | | | | |
|---|---|---|---|---|
| | புளூ, காக்கி ) | | | |
| 07. | தலைபாகை (Towel) | 138/- (5% GST)<br>(1 No) | 192/- (5% GST)<br>(1 No) | 176/-<br>(1 No) |
| 08. | டர்க்கி டவல் | 545/- (12% GST)<br>(1 No) | 580/- (12% GST)<br>(1 No) | 565/-<br>(1 No) |
| 09. | காலணி | 545/- (18% GST)<br>(per pair) | 385/- (18% GST)<br>(per pair) | 315/-<br>(per pair) |
| 10. | ஷ | 1455/- (18% GST)<br>(per pair) | 1875/- (18% GST)<br>(per pair) | 1575/-<br>(per pair) |

அ.கு :- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) 2022 வருடத்திற்கு பணியாளர்களின் சீருடைகள் வழங்க மறு விலைப்புள்ளிகள் கோரப்பட்டு பெறப்பட்ட விலைப்புள்ளியில் வ.எண். 01. காணும் Tamilnadu Small industries development Corporation Ltd, Thirumazhisai என்ற அரசு அங்கீகரிக்கப்பட்ட சிட்கோவின் விலை குறைவாக உள்ளதினால் விநியோக உத்தரவு வழங்க மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) பணியாளர்களுக்கு சீருடைகள் வாங்கும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலம்.

ந.க.எண். 1935/2021/எச்1

**தீர்மான எண்.23, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.20)** இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள மூன்று சக்கர ஆட்டோ TN73E 0139 என்ற வாகனத்தில் மின்கலன் மற்றும் செல்ப் மோட்டர் பழுதடைந்துள்ளதால் இதனை விலைப்புள்ளி கோரி நிவர்த்தி செய்ய 08.12.2021ஆம் நாளில் மன்றப்பொருளில் தோராயச் செலவினத் தொகை ரூ.15000/-க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. 13.12.2021ஆம் நாளில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் காணும் விலைப்புள்ளி வரப்பெற்றமைக்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | Items | Babu Battery Centre, Arcot (Rate) | MR Auto Centre, Arcot (Rate) | Arcot Battery Center, Arcot (Rate) |
|---|---|---|---|---|
| 01. | Battery | 5200.00 | 5400.00 | 5300.00 |
| 02. | Self Motor | 4550.00 | 4700.00 | 4750.00 |

அ.கு :- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) TN73E 0139 என்ற வாகனத்தில் மின்கலன் மற்றும் செல்ப் மோட்டர் பழுதடைந்துள்ளதால் இதனை நிவர்த்தி செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் Babu Battery Centre, Arcot என்பவரின் குறைவான விலைப்புள்ளி உள்ளதினால் விநியோக உத்தரவு வழங்க மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) பழுதினை நிவர்த்தி செய்ய ஆகும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1979/2021/எச்1

**தீர்மான எண்.24, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.21** இந்நகராட்சியின் பொது சுகாரதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73AC3449 என்ற இலகு ரக வாகனத்தினை பழுதுக்களை நீக்கி வாகன தகுதி சான்று பெற LAWRENCE AUTOMOTIVE PRIVATE LIMITED, VELLORE என்ற நிறுவனத்தில் 30.12.2022 என்ற நாளில் வாகனத்தை விடப்பட்டதற்கு 15.12.2022ஆம் நாளில் தோராயச் செலவினத் தொகை ரூ.41,000/-க்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, இவ்வாகனத்திற்கு மேலும் கூடுதலாக தொகை ரூ.4000/- அதிகமானதால் மொத்த தொகை ரூ.45000/-தை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)TN73AC3449 என்ற இலகு ரக வாகனத்தினை பழுதுக்களை நீக்கி வாகன தகுதி சான்று பெற LAWRENCE AUTOMOTIVE PRIVATE LIMITED, VELLORE என்ற நிறுவனத்தின் மூலம் பழுதுக்களை மேற்கொண்டமைக்கு கூடுதலாக பெறப்பட்ட தொகைக்கும் மன்ற பொருள் எதிர்நேக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3)வாகன பழுதிற்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1721/2021/எச்1

**தீர்மான எண்.25, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.22)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் **55**-தனியார் தூய்மைப் பணியாளர்களை கொண்டு இந்நகர பொது சுகாதாரப் பணிகளில் ஒப்பந்தபுள்ளி அடிப்படை விலைவிகிதத்தில் ஈடுபட்டு வருவதில் **28.02.2022**-ஆம் நாளில் நீடித்த ஒப்பந்தப்புள்ளி முடிவடைகிறது. எனவே, ஒப்பந்ததாரர் நிர்ணயம் செய்வதில் நிர்வாக ரீதியாக காலதாமதம் **மற்றும் வருகின்ற உள்ளாட்சி தேர்தல் நடத்தை விதிமுறைகள் வெளியாகும் என்பதால்** பொது சுகாதாரப் பணிகள் மற்றும் நிர்வாக நலன் கருதியும், பொது மக்களுக்கு எவ்வித பாதிப்புகள் ஏற்பாடா வண்ணம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் எவ்வித தோய்வுகள் ஏற்படாமல் இருக்க தொடர்ந்து தற்போதுள்ள **55**-தனியார் தூய்மைப் பணியாளர்களை **01.03.2022** முதல் **31.05.2022** வரையிலான நாட்களுக்கு ஒரு தூய்மைப் பணியாளருக்கு ஒரு நாள் தினக்கூலியான ரூ.**295/-** இத்துடன் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி(**13%**) ரூ.**38.35**, தொழிலாளர் மருத்துவ காப்பீடு(**3.25%**) ரூ.**9.58** மற்றும் சீருடைகள் நிர்வாக செலவினங்கள் ரூ.**17.00**-ஆக மொத்த தொகை ரூ.**359.93** என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் இத்தொகையினையே மேலும் மூன்று மாதங்களுக்கு **55**-தூய்மைப் பணியாளர்களின் மாத ஊதியத்தினை ஒப்பந்த நிறுவனமான எல்.டி. மேன்பவர் சொலுசன், வேலூர் என்பவருக்கு வழங்க தோரயச் செலவினத் தொகை ரூ.**18.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. **1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2)**திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் புதிய ஒப்பந்தபுள்ளிகள் கோரி நடவடிக்கைகள் எடுக்கும் வரை தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பந்த நிறுவனமான எல்.டி. மேன்பவர் சொலுசன், வேலூர்

என்பவர் மூலம் 55–தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து வழங்க நிர்வாக நலன் மற்றும் பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காத வகையில் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் மூன்று மாதங்களுக்கு கால நீடிப்பு செய்து பணி உத்திரவு வழங்க மன்றபொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3)55–தனியார் தூய்மைப் பணியாளர்களின் தினக்கூலியினை மாத ஊதியமாக வழங்க செலவினத் தொகையினை வருவாய் நிதி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2626/2017/எச்1

**தீர்மான எண்.26, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.23)** இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் பிரதான நீர் ஆதாரமாகிய வேப்பூர் மற்றும் பாலாற்றுப் படுகையில் காசிவிஸ்வநாதர் கோயில் அருகாமையில் அமைந்துள்ள கிணறு மற்றும் பெருமாள் கோயில் அருகாமையில் உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளில் இருந்து பெறப்படும் குடிநீரை கொண்டு 8 நீர்தேக்கத்தொட்டியில் நீரேற்றம் செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவைகளை பராமரிக்க குடிநீர் பணியாளர் பொறியியல் பிரிவில் குழாய் பொருத்துனர்–1, காவலர்1, மதகு திறப்பாளர்–2, ஆகிய பணியிடங்களுக்கான பணியாளர்கள் தற்போது உள்ளனர். பிரதான நீரேற்று நிலையத்தில் மின்வலியர் பணியிடமும் காலியாக உள்ளது. மேலும் தெருவிளக்கு 2502 எண்ணிக்கையில் உள்ளதை 1 மின் கம்பியாளர் மற்றும் 1 மின் கம்பி உதவியாளர் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே 1 மின்கம்பியாளரை வேப்பூர் நீரேற்று நிலையத்திற்கு நிரந்தரமாக மின்வலியர் பணியை பார்க்க பணிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 1 பணி ஆய்வர் பணியிடமும் காலியாக உள்ளது. இதனால் தேவைக்கு குறைவாகவே உள்ள பணியாளர்களை கொண்டு பராமரிப்பு செய்வது பணிச் சுமையாகவும், பணியில் தொய்வு. ஏற்படுகிறது. மேலும சீரான முறையில் குடிநீர் விநியோகம் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பொறியியல் பிரிவில் கட்டுமான பணிகளை செவ்வனே மேற்கொள்ள போதுமான தகுந்த திறமையான பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர்அவர்களின் தினக்கூலி 2021–22ம் விகிதத்தில் அமர்த்தி செயல்படுத்த வேண்டிய அத்தியாவசிய நிலை உள்ளது. மேலும் நகராட்சி மூலம் நேரடியாக தினக்கூலி பணிளாளர்களை அமர்த்தி பணிகளை செயல்படுத்திட வாய்ப்பில்லாமல் உள்ளது. மேலும் இந்நிலையில் ஆற்காடு நகராட்சி பகுதியில் ஆண்கள் சுய உதவிக்குழு நடத்திவரும் சபரி கிரிவாசன் ஆண்கள் சுயஉதவிக்குழு தங்கள் குழுவில் உள்ள உறுப்பினர்களின் தகுதிக்கேற்ற பணியை வழங்க வேண்டி மனு செய்துள்ளதை ஏற்று 11 பணியாளர்களை அவரவர் தகுதிக்கேற்ற பணியில் ஈடுபடுத்திக்கொள்ளவும், 1.04.2022 முதல் 31.03.2023 வரை அதற்காகும் 12 மாத காலத்திற்கான தோராய உததேச செலவினம் ரூ.16,27,164/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகளுக்கு பணிகளின் அவசியம் தேவை என்பதால் சிறப்பினமாக கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணியாளர்களுக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.27, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.24) இந்நகராட்சியில் 14th CFC 2019–20, 15th CFC Tiedgrant 2021–22 –ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட்டதற்கு Bright Advertising, Chennai விளம்பர நிறுவனத்திற்கு வழங்கவேண்டிய பில்தொகை ரூ.12,112/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**அ.கு:–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.28, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.25)** தமிழ்நாடு உள்ளாட்சி தேர்தல் – 2022 அறிவிப்பு வெளியாகும் நிலையில் உள்ளதால் இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் பயன்பாட்டில் உள்ள வாகனங்கள் மற்றும் அலுவலக பயன்பாட்டில் உள்ள வாகனங்கள் திடீர் பழுதுக்கள் எவையேனும் ஏற்பட்டால் இதனை உடனடியாக சரிசெய்ய அதன் அங்கீக்கப்பட்ட வாகன நிறுவனத்திடம் இப்பழுதுகளை நிவர்த்திச்செய்ய வேண்டி இதற்கான தோராயச்செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) தமிழ்நாடு உள்ளாட்சி தேர்தல் அறிவிப்பு வெளியானால் தேர்தல் நடத்தை விதி முறைகள் அமுலுக்கு வரும் என்பதால் இந்நகராட்சியின் பயன்பாட்டில் உள்ள வாகனங்கள் எவையேனும் திடீர் பழுதுக்கள் ஏற்பட்டால் அதன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் நிவர்த்தி செய்ய மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) இச்செலவினத் தொகையினை வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.047/2022/எச்1

**தீர்மான எண்.29, அனுமதிக்கப்பட்டது.**

ஆற்காடு
**நாள்: 25.01.2022**

தனி அலுவலர்,
ஆற்காடு நகராட்சி